27 AUG 1987

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம்

[1987, ஜூன் மாதம் 04 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

1987, ஜூன் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 3.00 தபாற் செலவு : ரூபா 2.30

1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மருத்துவ
(திருத்தச்) சட்டம்

[1987 ஜூன் 4 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 47/82

**மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மருத்துவ (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 105 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "இலங்கைப் பல்கலைக்கழகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, அப்பிரிவில் அந்தச் சொற்றொடர் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் பல்கலைக்கழகம்" என்னும் சொற்றொடரை இடுவதன் மூலமும் ;

(2) அதன் ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅ) போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகளை அப்போதைக்கு நிறைவேற்றுகின்றவரான ஆள் ; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில் "சிலோன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, அந்த உட்பிரிவில் அது இடம்பெறும் இடங்களிலெல்லாம் "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கல்லூரிப் பேரவைக் கூட்டங்களின் நடவடிக்கை முறை.

6. கல்லூரிப் பேரவைக் கூட்டம் ஒவ்வொன்றிலும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது அவர் வருகைதராவிடத்து போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது இருவரும் வருகைதாரவிடத்து சுகாதார (மருத்துவ சேவைகள்) பிரதிப் பணிப்பாளர் தவிசாளராகத் தலைமைதாங்குதல் வேண்டும்".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்த உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வாகடர்களாக வினைத்திறமைச் சான்றிதழ்கள் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாகடர்களாக வினைத்திறமை அல்லது தேர்ச்சிச் சான்றிதழ்கள் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

3—௭ 094647—3,845 (12/86)

(2) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "தாதிமார்களாக வினைத்திறமைச் சான்றிதழ்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தாதிமார்களாக வினைத்திறமைச் சான்றிதழ்கள் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(உ) எக்ஸ் கதிராளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஊ) மருத்துவப் பரிசோதனைக்கூடத் தொழிநுட்பவியலாளராக தேர்ச்சிச் சான்றிதழ் ;

(எ) பௌதிகச் சிகிச்சையாளராக தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஏ) தொழில்நோய் வைத்தியராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஐ) மின்னிதயவரைபுப் பதிவாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஒ) கேள்வியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஓ) பிணியாய் உடனலவியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஔ) பேச்சுச் சிகிச்சையாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(க) காய்ப்பு மருத்துவவியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ங) உணவியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ச) கண்ணோய் மருத்துவத் துணையாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ஞ) மின் கபாலவரைபுப் பதிவியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ட) போஷாக்கியலாளராக தேர்ச்சிச் சான்றிதழ் ;

(ண) பிணியாய் உளவியலாளராகத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"மருத்துவப் பேரவையின் அமைப்பும் கடமைகளும்.

12. (1) (இக்கட்டளைச்சட்டத்தின் "மருத்துவப் பேரவை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) இலங்கை மருத்துவப் பேரவையானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தலைவர் ;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றினதும் மருத்துவத்துறை ஆசிரியர்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினரொருவர் ;

(இ) 29 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவத்தொழிலாளர்களால் தெரிவுசெய்யப்படும் எட்டு உறுப்பினர்கள் ;

(ஈ) 41 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழில் பார்ப்பதற்கு உரித்துடையவர்களான ஆட்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினரொருவர் ;

(உ) 43 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல் மருத்துவர்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினரொருவர் ;

(ஊ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள் ; இவர்களுள் ஆகக் குறைந்தது இரண்டு உறுப்பினர்களேனும் அரசாங்கத்தின் ஊழியத்தில் இல்லாதவராகவோ அல்லது அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியம் பெறுதவர்களாகவோ இருத்தல் வேண்டும் ;

(எ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் ;

(ஏ) போதனை வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதி," அத்துடன்

(2) அதற்கான (3) ஆம் உட்பிரிவில் "சிலோன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) மூன்றும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

" (4) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளெவரும் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்படும் இடாப்புகளின்படி அத்தகைய தேர்தல் நேரத்தில் இலங்கையில் வதிவற்றவராக இருந்தால் ஓராம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

மருத்துவப் போரவை உறுப்பினர்கள் மருத்துவத் தொழிலர்களாதல் வேண்டும் என்பது

13. ஆளெவரும் அவர் மருத்துவத் தொழிலர் ஒருவராக அல்லது மருத்துவத்தையும் அறுவை வைத்தியத்தையும் பார்ப்பதற்கு உரித்துடைய ஆள் ஒருவராக அல்லது பல் மருத்துவரொருவராக இருந்தாலன்றி, மருத்துவப் போரவையின் உறுப்பினரொருவராவதற்குத் தகுதியுடையவராதலாகாது".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, "மருத்துவப் பேரவையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "12 ஆம் பிரிவின் (எ), (ஏ) என்னும் பந்திகளில் குறிப்பிடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த மருத்துவப் பேரவையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு அதன் (இ) என்னும் பந்தியிலுள்ள "சிலோன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) மருத்துவப் பேரவையானது பதிவாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். ஆவர் மருத்துவப் பேரவையின் செயலாளராகவும், பொருளாளராகவும், மருத்துவப் பேரவையின் பொருளாளராக இருப்பதற்கென வேறு ஆளொருவரை மருத்துவப் பேரவை நியமித்தாலன்றி, செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் உதவிப் பதிவாளர் ஒருவரையும் நியமிக்கலாம். இவர் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவாளரது கடமைகளைப் புரிகையில் அவருக்கு உதவியாக இருத்தல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தப் பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் "கணக்காய்வு செய்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்காய்வு செய்தல்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) பந்தி (ஈ) என்பதனை உடனடுத்து, பின்வரும் புதிய பந்திகளை சேர்ப்பதன்மூலமும் :—

"(உ) "பல்கலைக்கழகங்களிலும், இக்கட்டளைச் சட்டத்தின்கீழும் ஆளொருவரின் பதிவைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தாக்குகின்றதான ஏதேனும் தகைமையை வழங்கும் அல்லது அளிக்கும் ஏனைய நிறுவனங்களிலும் உள்ள கற்கை நெறிகள், பரீட்சைகள், பணியாட்டொகுதி, உபகரணம், இருப்பிடவசதி, பயிற்சி அத்துடன் பிற வசதிகள் என்பன தொடர்பிலான தராதரங்கள் உட்பட, மருத்துவக் கல்வியின் ஆகக்குறைந்த தராதரங்களைப் பேணுதல் ;

(ஊ) "பல்கலைக்கழகங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் பட்டப்பின் மருத்துவக் கல்வியின் ஆகக்குறைந்த தராதரங்களைப் பேணுதல்" ;

முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் IIIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்தல்.

**11.** பாகம் III என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் IIIஅ எனப் பயனுடையதாதலும் வேண்டும் :—

## பாகம் IIIஅ

### மருத்துவப் பேரவையின் தத்துவங்கள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் என்பவற்றுள் நுழைவதற்கும் அத்துடன் விசாரணைகள் செய்வதற்கும் மருத்துவப் பேரவையால் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குள்ள தத்துவம்.

19அ. (1) மருத்துவப் பேரவையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆளெவரும், இரண்டு கிழமைகளுக்குக் குறையாத எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினுள் அல்லது நிறுவனத்தினுள் நுழைந்து அங்கு பின்வருவன, விதித்துரைக்கப்பட்ட தாரதரங்களுக்கு அமைய உள்ளனவா எனக் கண்டறியும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சோதனைகளையும் புலனாய்வுகளையும் இயைபான கல்வித்துறையின் உறுப்பினர்களிடமிருந்து அத்தகைய விசாரணைகளையும் செய்யலாம் :—

(அ) மருத்துவத் தகைமையொன்றை வழங்குவதற்கு இட்டுச் செல்லுகின்றனவான, அத்தகைய பல்கலைக்கழகத்தினால் அல்லது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கற்கை நெறிகள் ;

(ஆ) அத்தகைய தகைமை எதனையும் வழங்கும் அல்லது அளிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் தேவைப்படுத்தப்படும் தேர்ச்சியின் அளவு ;

(இ) அத்தகைய கற்கை நெறிகளுக்கென அத்தகைய பல்கலைக்கழத்தால், அல்லது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பணியாட்டொகுதி, உபகரணம், இடவசதி, அத்துடன் வசதிகள் என்பன.

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தர் அல்லது நிறுவனமொன்றின் தலைவர், அத்துடன் இயைபான துறையின் உறுப்பினர்கள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும், அந்த உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எல்லாச் சோதனைகளையும் புலனாய்வுகளையும், விசாரணைகளையும் செய்யும் நோக்கத்திற்காக அந்த ஆளுக்கு அளித்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ், மருத்துவப் போரவையால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், அந்த உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறுன அத்தகைய ஏதேனும் சோதனையை, புலனாய்வை அல்லது விசாரணையைச் செய்கின்ற விடத்து, தமது முடிவுகள் பற்றிப் போரவைக்கு அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் மருத்துவப் போரவையால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும், அத்தகைய ஆளுக்கு அந்த உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கின்றவருமான ஆளொவ்வொருவரும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளாகப் பகிரங்க சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களையும் நிறுவனங்களையும் தகவல் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துவதற்கு மருத்துவப் போரவைக்குள்ள தத்துவம்.

19ஆ. மருத்துவப் போரவையானது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தரை அல்லது நிறுவனமொன்றின் தலைவரை, 19அ என்னும் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பாகப் போரவை தேவைப்படுத்தக் கூடியவாறுன அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தை அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் கொடுத்துதவுமாறு எழுத்தில் பணிக்கலாம் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தர் அல்லது நிறுவனத்தின் தலைவர், அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களாலும் நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட தகைமைகளின் அங்கீகாரத்தை மீளப்பெறுமாறு விதப்புரைசெய்வதற்கு மருத்துவப் போரவைக்குள்ள தத்துவம்.

19இ. (1) மருத்துவப் போரவையானது, 19அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட அறிக்கையொன்றின்மீது அல்லது 19ஆ என்னும் பிரிவின்கீழ் அதற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலின்மீது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினுல், அல்லது நிறுவனத்தினுல் தேவைப்படுத்தப்பட்ட மருத்துவத் தகைமையை அல்லது தேர்ச்சிப் பட்டத்தை, அத்தகைய ஏதேனும் தகைமையை வழங்குவதற்கென அல்லது அளிப்பதற்கென நடாத்தப்பட்ட பரீட்சை எதிலும் வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதான அத்தகைய பல்கலைக்கழகமொன்றினுல் அல்லது நிறுவனத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட கற்கைநெறிகள், அல்லது அத்தகைய கற்கைநெறி நோக்கத்திற்கென, அத்தகைய பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட பணியாட்டொகுதி இடவசதி, அத்துடன் உபகரணம் என்பன விதித்துரைக்கப்பட்ட நியமங்

களுக்கு இசைந்தனவாகவில்லையெனத் திருப்திப்படு மிடத்து, அது, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யும் நோக்கத்திற்காக அத்தகைய தகைமையானது ஏற்றங்கீகரிக்கப்படுதலாகாது என அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்.

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்று அல்லது நிறுவனமொன்று தொடர்பாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதப்புரையொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், அமைச்சரானவர், அத்தகைய விதப்புரையின் பிரதியொன்றை, அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அதன் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு கோருதலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், பல்கலைக்கழகமொன்றினால், அல்லது நிறுவனத்தினால், (2) ஆம் உட்பிரிவின்கீழ் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பரிசீலித்த பின்னரும், அத்துடன் அவர் அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய மேலதிக விசாரணையைச் செய்த பின்னரும்—

(அ) மருத்துவத் தகைமையொன்றை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதான அத்தகைய பல்கலைக் கழகத்தால் அல்லது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கற்கைநெறி ;

(ஆ) அத்தகைய தகைமையை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு அத்தகைய பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் தேவைப்படுத்தப்படும் தேர்ச்சியின் அளவு ; அல்லது

(இ) அத்தகைய கற்கைநெறிக்காக அத்தகைய பல்கலைக்கழகத்தால், அல்லது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பணியாட்டொகுதி, உபகரணம், இடவசதி அத்துடன் வசதிகள் என்பன,

விதித்துரைக்கப்பட்ட நியமனங்களுக்கு இசைந்தனவாகக் காணப்படவில்லையென அவர் திருப்திப்படுகின்றவிடத்து, அந்தத் தகைமையைக் கொண்டுள்ளவரை இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ளப்படுவதற்கு இயலச் செய்கின்றதான இச்சட்டத்தின் ஏற்பாடு எதுவும், அத்தகைய பல்கலைக்கழகம், அல்லது நிறுவனம் தொடர்பாக அல்லது அத்தகைய பல்கலைக்

கழகத்துடன் ஒன்றிணைந்த நிறுவனம் எது தொடர்பிலும் அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய தேதியிலிருந்து பயனுறுதொழிதல் வேண்டும்.

விசாரணைகள்.

19ஈ. (1) அமைச்சரானவர், அதன்சார்பில், முறைப்பாடொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், மருத்துவப் பேரவையின் அலுவல்களையும், இக்கட்டளைச் சட்டத்தின் கீழான கடமைகள் அதனால் புரியப்படுதலையும் விசாரணை செய்வதற்கென ஆளெவரையும் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய விசாரணையானது நடாத்தப்படுமிடத்து, மருத்துவப் பேரவையின் உறுப்பினரொவ்வொருவரும், அத்துடன் மருத்துவப் பேரவையின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொவ்வொருவரும், விசாரணையை நடாத்தும் ஆளினால் அவ்வாறு செய்யும்படி வேண்டிக்கொள்ளப்பட்டதன்மேல், மருத்துவப் பேரவையின் வேலை மற்றும் அலுவல்கள் என்பன தொடர்பாக, அவரது அறிவுக்குட்பட்ட அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், அந்த ஆள் தேவைப்படுத்தக்கூடியவாறானவையான, அவரது கட்டுக்காப்பில் இருக்கும் அத்தகைய இடாப்புகளை அல்லது ஆவணங்களைக் காண்பித்தலும் வேண்டும்.

பொருள் கோடல்.

19உ. இக்கட்டளைச்சட்டத்தின் இந்தப் பாகத்தில், "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம்" என்பது மருத்துவத் தகைமையொன்றை வழங்குகின்றதான அல்லது அளிக்கின்றதான ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் என்று பொருள்படும். "மருத்துவத் தகைமை" என்பது அதனைக் கொண்டிருப்பவரை இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு உரித்தாக்குகின்ற ஏதேனும் தகைமை என்று பொருள்படும்.

முதனமைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது --

(1) அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அதற்கான (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளில் "சிலோனில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "(இலங்கையில்)" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலம் :—

"(ஆஆ) நாற்பத்தோராம் பிரிவின் 2, 2அ, 2ஆ, 2இ என்னும் உட்பந்திகளின்கீழ் மருத்துவத்தொழிலையும் அறுவை வைத்தியத்தொழிலையும் புரிவதற்கு உரித்துடையவர்களான ஆட்கள் பற்றிய இடாப்பொன்று ;

"(ஆஆஆ) முப்பத்தோராம் பிரிவின்கீழ் தற்காலிகமாக பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவர்களான ஆட்கள் பற்றிய இடாப்பொன்று ;"

(இ) அதன் (ஈ) என்னும் பந்தியில் "சிலோனில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ஈ) அதன் (உ) என்னும் பந்தியில் "சிலோனில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(உ) அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்—

"(ஊ) இலங்கையில் மருத்துவத்துறைசார் உதவியாளர்களாகத் தொழில் புரிவதற்குத் தகைமை பெற்றவர்களான ஆட்கள் பற்றிய இடாப்பொன்று ;";

(2) அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) இலங்கைப் பிரசையாக இல்லாதவரான ஆளொருவர் அமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியின் அங்கீகாரத்துடனன்றிப் பதிவு செய்யப்படுதலாகாது.";

(3) அதன் (5அ) என்னும் உட்பிரிவில் "சிலோன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

13. பிரிவு 26 என்பதை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 26அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"பதிவைப் புதுப்பித்தல்.

26அ. (1) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்களை, விதித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளிலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீதும், அவர்களது பதிவைப் புதுப்பிக்குமாறு அமைச்சர் தேவைப்படுத்தலாம்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வெவ்வேறு வகுதியான ஆட்கள் தொடர்பில் வெவ்வேறு கால இடைவெளிகளும் வெவ்வேறு கட்டணங்களும் விதித்துரைக்கப்படலாம்.

(3) மருத்துவப் பேரவையானது, எந்த வகுதியை அத்தகைய ஆள் சார்ந்திருக்கின்றாரோ அந்த வகுதிக்கான விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைவதன்முன்னர் தமது பதிவைப் புதுப்பிக்கத் தவறுகின்ற ஆளெவரினதும் பெயரை, தோதான இடாப்பிலிருந்து அழித்துவிடலாம்.

(4) எந்த ஆளுடைய பெயர் (3) ஆம் உட்பிரிவின்கீழ், இடாப்பிலிருந்து அழிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளெவரும் எந்தத் தகைமையின் அடிப்படையில் முதலில் அத்தகைய இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளாரோ அந்தத் தகைமையைத் தொடர்ந்து அவர் கொண்டிருப்பாராயின், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் அத்தகைய இடாப்பில் மீண்டும் அவரது பெயர் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு அதன் (1), (2) (2அ) என்னும் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) ஆளொருவர் மருத்துவத் தொழிலரொருவராகப் பதிவு செய்வதற்கெனப் பேரவைக்கு விண்ணப்பம் செய்வதன்மேல்—

(அ) அவர் நற்குணம் உடையவராகவும்; அத்துடன்

(ஆ) (i) அவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் மருத்துவமாணிப் பட்டமொன்றையும் அத்துடன் 32 ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் உடையவராகவும்; அல்லது

(ii) ஓராம் உட்பந்தியின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவராக இருந்துகொண்டு—

(அஅ) ஓர் இலங்கைப் பிரசையாகவும்;

(ஆஆ) இலங்கை தவிர்ந்த ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக்கழகத்தில் அல்லது மருத்துவப் பாடசாலையில் பெற்ற எந்த மருத்துவமாணிப் பட்டமொன்று அல்லது அதற்குச் சமமான தகைமைகள், இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய பல்கலைக் கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையின் தராதரத்தைக் கருத்திற்கொண்டு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த மருத்துவமாணிப் பட்டத்தை அல்லது தகைமைகளை உடையவராகவும்; அல்லது

(இஇ) மருத்துவப் பேரவையால் அதற்கென விதித்துரைக்கப்பட்ட சிறப்புப் பரீட்சையில் சித்தியெய்தியவராகவும்; அத்துடன்

(ஈஈ) 32 ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும்,

இருந்தால், மருத்துவத் தொழிலரொருவராகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்திரண்டாம் பிரிவின்கீழான சான்றிதழொன்றை மருத்துவப் பேரவையிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு வேண்டப்படும் அத்தகைய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும் நோக்கங்களுக்கு மாத்திரம், ஆள் ஒருவர், மருத்துவப் பேரவைக்கு அதற்கென விண்ணப்பஞ் செய்ததன்மேல்,—

(அ) நற்குணம் உடையவராகவும்; அத்துடன்

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த ஒரு பல்கலைக்கழகத்தின் மருத்துவமாணிப் பட்டமொன்றையுடையவராக; அல்லது

(ii) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த ஒரு பல்கலைக் கழகத்தின் மருத்துவமாணிப் பட்டத்தைப் பெறுவதற்கு அவசியமான பரீட்சையில் சித்தியடைந்து, ஆனால் அப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் பல்கலைக்கழகம் தாமதிப்பதன் காரணமாக அப்பட்டத்தைப் பெறாதவராக; அல்லது

(iii) முற்போந்த உட்பந்திகளின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவராக இருந்துகொண்டு—

(அஅ) ஓர் இலங்கைப் பிரசையாகவும்; அத்துடன்

(ஆஆ) (i) இலங்கை தவிர்ந்த ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக் கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையில் பெற்ற எந்த மருத்துவமாணிப் பட்டமொன்று அல்லது அதற்குச் சமமான தகைமைகள், இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய பல்கலைக் கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையின் தராதரத்தைக் கருத்திற் கொண்டு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த மருத்துவமாணிப் பட்டத்தை அல்லது தகைமைகளை உடையவராகவும்; அல்லது

(ii) இலங்கை தவிர்ந்த ஏதேனும் நாட்டின் பல்கலைக்கழகத்தினது அல்லது மருத்துவப் பாடசாலையினது மருத்துவக் கல்வியின் தராதரத்தைக் கருத்திற் கொண்டு இப்பிரிவின் நோக்கங்களுக்காக மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்படும் அத்தகைய பல்கலைக்கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையின் மருத்துவமாணிப் பட்டத்தைப் பெறுவதற்கு அவசியமான பரீட்சைகளில் சித்தியெய்தி, ஆனால் அத்தகைய பட்டத்தைப் பெறுவதற்குத் தேவைப்படும் உள்ளுறை காலப்பகுதியைப் பூரணப்படுத்தவில்லையென்ற காரணத்துக்காக அப் பட்டத்தைப் பெறாதிருப்பதோடு சுகாதாரச் சேவைகள் பணிப்பாளரினால் இலங்கையில் அந்த உள்ளுறைக் காலப்பகுதியைப் பூரணப்படுத்த அனுமதிக்கப்பட்டவராகவும்; அத்துடன்

(இ) மருத்துவப் பேரவையால் அதற்கென விதித்துரைக்கப் பட்ட சிறப்புப் பரீட்சையில் சித்தியெய்தியவராகவும்

இருந்தால் மருத்துவத்தொழிலர் ஒருவராகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது.—

"அங்கீகரிக்கப் தினால் தொழி லமர்த்தப் பட்டிருக்கும் குறித்த சில வைத்தியர்கள் தற்காலிகமாகப் பதிவு செய்யப் படுதல்.

31. எந்த ஆள் 29 (1) ஆம் பிரிவின்கீழ், பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையற்றவராக உள்ளாரோ அந்த ஆளெவரும், அத்தகைய ஆள் மருத்துவ அலுவலரொருவராக அரசாங்க ஊழியத்தில் உள்ளார் என்ற பொருள் பட சுகாதாரசேவைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்ற சான்றிதழொன்றைக் காண்பிப்பதன்மேலும், அத்துடன் ஐந்நூறு ரூபா கட்டணமொன்றைச் செலுத்துவதன்மேலும் அரசாங்கத்தின்கீழ் அவர் ஊழியத்திலிருக்கும் காலப்பகுதிக்கு மருத்துவத் தொழிலரொருவராகப் பதிவாளரால் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள் தனியான இடாப்பொன்றில் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அரசாங்கத்தின்கீழான அவரது ஊழியக் காலப்பகுதி முடிவுற்றதன்மேல் இடாப்பிலிருந்து அழிக்கப்படுதலும் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

அங்கீகரிக்கப் பட்ட மருத்துவ மனைகளில் அல்லது நிறுவனங் களில் இருந்து பெற்ற அனுப வச் சான்றிதழ்.

32 (1) மருத்துவத் தொழிலரொருவராக தற்காலிகமாகப் பதிவுசெய்யப்பட்டவரான ஆளொருவர், இப்பிரிவின்கீழ் ஒரு சான்றிதழிற்காக மருத்துவப் பேரவைக்கு விண்ணப்பிக்குமிடத்து, அத்தகைய பேரவையானது, அவர்—

(அ) அங்கீகரிக்கபட்ட மருத்துவமனையொன்றில் அல்லது பலவற்றில் அல்லது நிறுவனமொன்றில் அல்லது பலவற்றில் விதித்துரைக்கப் பட்ட காலப்பகுதிக்கு வதிவுள்ள மருத்துவத் தன்மையில், ஊழியத்தில் ஈடுபட்டுள்ளார் என ;

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் கூறப்பட்டவாறு அவரது ஊழியத்தின்போது, அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு மருத்துவத் தொழிலிலும், அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்கு அறுவை மருத்துவத் தொழிலிலும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏனைய துறைகளிலும் ஈடுபட்டுள்ளார் என, அத்துடன்

(இ) அவ்வாறு தொழிலிலமர்த்தப்பட்டிருக்கையில் திருப்திகரமான சேவையை அளித்துள்ளார் எனத்

திருப்திப்படுமிடத்து, அத்தகைய பேரவை, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அத்தகைய பேரவை அவ்வாறு திருப்தியடைந்துள்ளது என்ற சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு—

"அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை அல்லது நிறுவனமொன்று" என்பது சுகாதார சேவைகள் பணிப்பாளராலும், அத்துடன் போதனு வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதியாலும் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவமனைகள், நிறுவனங்கள் என்பவற்றிடையேயிருந்து, மருத்துவப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருத்துவமனை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்.

" அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதிகள் " என்பது மருத்துவம் அல்லது அறுவைமருத்துவம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு துறைகள் என்பன தொடர்பில், நாட்டின் மருத்துவத் தேவைகளைக் கருத்திற் கொண்டு மருத்துவப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியொன்று என்று பொருளாகும்."

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (6) இருபத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருக்கின்றவரும், அத்துடன் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு மருத்துவமனையில் அல்லது பலவற்றில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஒரு வதிவுள்ள மருத்துவத் தன்மையில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கின்றவருமான ஆளொவருக்கும் அத்தகைய ஆள் மருத்துவத் தொழி

லர் ஒருவராகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், போவையானது, அத்தகைய ஆள், அவரது ஊழியத்தின்போது இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய மருத்துவ, அறுவை மருத்துவ, அல்லது பேறுகால மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ளாரெனத் திருத்திப்பட்டால், இப்பிரிவின்கீழ் போவையினால் சான்றிதழொன்று வழங்கப்படலாம். "

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

" (ஆ) அவர் எந்த டிப்புளோமா அல்லது பட்டம் அல்லது சான்றிதழின்மீது மருத்துவத் தொழிலாராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த டிப்புளோமாவை, பட்டத்தை அல்லது சான்றிதழை இழந்துவிட்டார் ;"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, " சிலோன் " என்னும் சொல்லிற்குப் பதிலாக " இலங்கை " என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் பின்வருவருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்தி (ஈ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(உ) இப்பிரிவின் (2இ) என்னும் உட்பிரிவின்கீழ் மருத்துவத் தொழிலையும் அறுவை மருத்துவத் தொழிலையும் புரிவதற்கு உரித்துடையவராகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றவரும் அப்போதைக்கு அவ்வுட்பிரிவின்கீழ் பேணப்படும் இடாப்பில் அவரது பெயரினை உடையவருமான எவரேனும் பெருந்தோட்ட மருந்தாளர் ;"

(2) அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (2இ) ஒரு பெருந்தோட்டத்திலாயினுஞ்சரி, அல்லது பெருந்தோட்டங்களின் தொகுதியிலாயினுஞ்சரி தொழிலிலீடுபட்டிருக்கின்ற அல்லது அவ்வாறு ஊழியத்தில் இல்லா

தொழிந்தாலுஞ்சரி அத்தகைய பெருந்தோட்ட மருத்தாள ரெவரும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருப்திப் படுமளவுக்கு—

(i) (அ) பெருந்தோட்ட மருந்தாளரொருவரென்ற தன்மையில், ஆகக்குறைந்தது இருபதாண்டு கூட்டுமொத்தக் காலப் பகுதிக்கு பெருந்தோட்ட மருந்தாளராக திறமையாக வும், திருப்தியாகவும் அவர் சேவையாற்றியுள்ளார் என ; அல்லது

(ஆ) மருந்தாளர் என்ற தன்மையில், ஒரு பெருந்தோட்டத் திலும் அல்லது ஒரு பெருந்தோட்டத்தொகுதியிலும் பகி ரங்க சேவையிலும், மருந்தாளரொருவராக ஆகக்குறைந் தது இருபதாண்டுக் கூட்டுமொத்தக் காலப்பகுதிக்கு திறமையாகவும் திருப்தியாகவும் அவர் சேவையாற்றியுள் ளார் என ; அத்துடன்

(ii) அந்தக் காலப்பகுதிக்குள்ளாக, ஓர் அல்லது பல மருத்து வத் தொழிலர்களின்கீழ், ஓர் அல்லது பல மருத்துவ மனைகளில் ஆகக் குறைந்தது இரண்டாண்டு கூட்டு மொத்தக் காலப்பகுதிக்கு அவர் சேவையாற்றியுள்ளார் என ; அத்துடன்

(iii) அந்த நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட பயிற்சிக் காலப்பகுதிக்கு அவர் பயிற்சி பெற்றுள்ளார் என ;

எண்பிப்பைக் கொடுத்துதவுவதன்மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படுவதன்மீதும், மருத்துவத் தொழிலையும், அறுவை மருத்துவத் தொழிலையும் புரிவதற்கு உரித்துடையவ ரெனப் பதிவாளரால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

பதிவாளரானவர், இவ்வுட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்களைக்கொண்ட இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நீக்கப்படவேண்டுமென மருத்துவப் பேரவையால் கட்டளையிடப் பட்டவரான ஆளெவரினதும் பெயரை அதிலிருந்து நீக்கிவிடு தலும் வேண்டும்.

(3) அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதி லாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

“ (3) ஆயின், (1) (அ) என்னும் உட்பிரிவின்கீழ் அல்லது (இ) என் னும் உட்பிரிவின்கீழ் அல்லது (1) (இஇ) என்னும் உட்பிரிவின் கீழ் அல்லது (1) (இஇஇ) என்னும் உட்பிரிவின்கீழ் மருத்து வத் தொழிலையும் அறுவை மருத்துவத் தொழிலையும் புரிவதற்கு உரித்துடைய அப்போதிக்கரியாக இருக்கின்ற எவரேனும் ஆள், அல்லது (1) (இஇ) என்னும் உட்பிரிவின்கீழ் மருத்துவத்தொழி லையும் அறுவை மருத்துவத்தொழிலையும் புரிவதற்கு உரித்துடைய எவரேனும் பெருந்தோட்ட அப்போதிக்கரி அல்லது (1) (உ) என்னும் உட்பிரிவின்கீழ், மருத்துவத் தொழிலையும் அறுவை

மருத்துவத் தொழிலையும் புரிவதற்கு உரித்துடைய எவரேனும் பெருந்தோட்ட மருந்தாளர் நோயாளி ஒருவரைப் பரிகரிப்பதில் திறமையின்மைக்கு அல்லது அசட்டைக்கு குற்றவாளியாகவுள்ளார் என அல்லது மருத்துவத் தொழிலையும் அறுவை மருத்துவத் தொழிலையும் புரிவதற்கு அவர் தகுதியற்றவரெனக் காட்டுகின்ற நடத்தைக்குக் குற்றவாளியாகவுள்ளாரென மருத்துவப் பேரவையின் திருப்திக்குக் காட்டப்படுமிடத்து, நிரந்தரமாக அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் போது அவருக்களிக்கப்பட்ட சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள் என்பனவற்றிலிருந்து அத்தகைய இடைநிறுத்திவைக்கப் படவேண்டுமென்ற கட்டளை ஒன்றை அத்துடன் விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுமிடத்து, விடயத்துக்கு ஏற்றுற்போல (2) ஆம் உட்பிரிவின்கீழ், அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழ், அல்லது (2ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் பேணப்படும் அப்போதிக்கரிமாரின் இடாப்பிலிருந்து எவரேனும் ஆளின் பெயர் அழிக்கப்படவேண்டும் என்கின்றதான கட்டளையொன்றை அல்லது (2இ) என்னும் உட்பிரிவின்கீழ் பேணப்படும் பெருந்தோட்ட மருந்தாளர்களின் இடாப்பிலிருந்து எவரேனும் ஆளின் பெயர் அழிக்கப்பட வேண்டுமென்கின்றதான கட்டளையொன்றை மருத்துவப் பேரவை ஆக்கலாம்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஆளெவரும், அவர் நற்குணமுடையவராகவும், அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தால் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றினால் அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பல்மருத்துவப் பட்டமொன்றை அல்லது அதில் டிப்புளோமாவை உடையவராக இருந்தாலன்றி பல்மருத்துவரொருவராகப் பதிவு செய்யப்படுதலாகாது.".

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அந்த உட்பிரிவின்கீழ் பல் மருத்துவரொருவராகப் பதிவு செய்யப்படத் தகுதியற்றவரான ஆளொருவர் ; அவர்—

(அ) பிரசாவுரிமை தொடர்பாக அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற சட்டத்திற்கிணங்க இலங்கைப் பிரசையொருவராகவும் ;

(ஆ) இலங்கை தவிர்ந்த ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக் கழகத்தின் அல்லது மருத்துவ கல்விச் சாலையில் பல் மருத்துவத்தில் அல்லது வாய்நோயியலில் இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக மருத்துவப் பேரவையினால் அங்கீகரிக் கப்பட்டதான பட்டமொன்றினை அல்லது அதற்குச் சம மான தகைமையை உடையவராகவும் ; அத்துடன்

(இ) மருத்துவப் பேரவையால் அதற்கென விதித்துரைக்கப் பட்ட சிறப்புப் பரீட்சையொன்றில் சித்தியெய்தியவராக வும் ;

இருந்தால் பல்மருத்துவரொருவராகப் பதிவு செய்யப்படலாம்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படு கின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவை நீக்குதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும் ; அத்து டன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(ஆ) எந்த திப்புளோமாவை, பட்டத்தை அல்லது சான்றி தழை ஆதாரமாகக் கொண்டு, அவர் பல்மருத்துவரொரு வராகப் பதிவுசெய்யப்பட்டாரோ அந்த திப்புளோமாவை, பட்டத்தை, அல்லது சான்றிதழை அவர் இழந்திருந் தால் ;".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு "சிலோன்", என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "சிலோன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அந்தப் பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதி லாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4)(அ) பந்தி (ஆ) என்பதற்கு அமைவாக, பல்மருத்துவ ரொருவர் "மருத்துவர்" என்ற பட்டப் பெயரை மேற்கொள்வ தற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய பட்டப்பெயரைப் பயன்படுத்துகின்றவரான ஆளொவ்வொருவரும், தமது பெயருக்குப் பின்னர் "பல் மருத்துவர்" என்ற சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பல்மருத்துவரொருவர், 43(1) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை உடையவராக இருந்தாலன்றி, பல் மருத்துவர் அல்லது பல் வைத்தியர் என்ற பட்டப்பெயரை மேற்கொள்ளுதலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளை முறையே அதன் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகள் என மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இஇ) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, இலங்கைக்கு வெளியேயுள்ள அந்நிறுவனத்திலுள்ள பயிற்சித் தராதரத்தையும் மருந்தாக்கவியல் கல்வியையும் கருத்தில் கொண்டு, கல்லூரிப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டதான அத்தகைய நிறுவனமொன்றினால் மருந்தாக்கவியலில் வழங்கப்பெற்ற தகைமையொன்றை உடையவராகவும், அத்துடன், அதன் பின்னர் கல்லூரிப் பேரவையால் அந்நோக்கத்திற்கென நடாத்தப்பட்ட சிறப்புப் பரீட்சையொன்றில் சித்தியெய்தியவராகவும்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் VIIIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

29. பாகம் VIII, ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VIII அ எனப் பயனுறுதலும் வேண்டும் :—

## பாகம் VIII அ

### மருத்துவத்துறைசார் உதவியாளர்கள்

மருத்துவத் துறைசார் உதவியாளர் களின் இடாப்பு தனித்தனிப் பாகங்களாக இருத்தல் வேண்டும்.

60அ. (1) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் பேணப்படும், மருத்துவத்துறைசார் உதவியாளர்களின் இடாப்பு, பின்வருமாறு தனித்தனிப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) பாகம் அ, எக்ஸ் கதிராளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) பாகம், அ, மருத்துவப் பரிசோதனைகூடத் தொழினுட்பவியலர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) பாகம் இ, பௌதிகச் சிகிச்சை செய்பவர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) பாகம் ஈ, தொழில்நோய் வைத்தியர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) பாகம் உ, மின்னிதயவரைபுப் பதிவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) பாகம் ஊ, கேள்வியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(எ) பாகம் எ, பிணியாய் உடனலவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) பாகம் ஏ, பேச்சுச் சிகிச்சையாளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஐ) பாகம் ஐ, காப்பு மருத்துவவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஒ) பாகம் ஒ, உணவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஓ) பாகம் ஓ, கண்நோய் மருத்துவத்துணையியலாளர்கள் என இடாப்பிற் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஔ) பாகம் ஔ, மின்கபால வரைபுப் பதிவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(க) பாகம் க, போஷாக்கியலாளர்கள் என இடாப்பிற் சேர்த்துக் கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ங) பாகம் ங, பிணியாய் உளவியலாளர்கள் என இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எல்லா ஆட்களினது பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(2) மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராகப் பதிவுசெய்வதற்கான கட்டணம், பதிவுசெய்வதற்காக விண்ணப்பித்ததன்மேல், பதிவாளருக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் இருநூற்றைம்பது ரூபாவாதலும் வேண்டும்.

மருத்துவத் துறைசார் உதவியாளர்களாக இடாப்பில் சேர்த்து கொள்வதற்கான தகைமை.

60ஆ. (அ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் எக்ஸ் கதிராளர் ஒருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் எக்ஸ் கதிராளரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஆ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால், மருத்துவப் பரிசோதனைக்கூடத் தொழினுட்பவியலர் ஒருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருந்

தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில், மருத்துவப் பரிசோதனைக்கூட தொழினுட்பவியலாளரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடைவராதல் வேண்டும்.

(இ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் பௌதிகச் சிகிச்சை செய்பவர் ஒருவரென வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் பௌதிகச் சிகிச்சை செய்பவரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஈ) ஆளொருவர் நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் தொழில் நோய் வைத்தியரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால் அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் தொழில் நோய் வைத்தியரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(உ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும் கல்லூரிப் பேரவையினால் மின்னிதய வரைபுப் பதிவியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் மின்னிதய வரைபுப் பதிவியலாளரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையராதல் வேண்டும்.

(ஊ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும் கல்லூரிப் பேரவையினால் கேள்வியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் கேள்வியலாளரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(எ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் பிணியாய் உளவியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் பிணியாய் உளவியலாளரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஏ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் பேச்சுச் சிகிச்சையாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறை

சார் உதவியாளர் இடாப்பில் பேச்சுச் சிகிச்சையாள ரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஐ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் காய்ப்பு மருத்துவவியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறை சார் உதவியாளர் இடாப்பில் காய்ப்பு மருத்துவவியலாளரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஒ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் உணவியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் உணவியலரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஓ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் கண்ணோய் மருத்துவத் துணையாளர் ஒருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத் துறைசார் உதவியாளர் இடாப்பில் கண்ணோய் மருத்துவத் துணையாளரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ஔ) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் மின்கபால வரைபுப் பதிவியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் மின்கபால வரைபுப் பதிவியலாளரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(க) ஆளொருவர்,, நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் போஷாக்கியலாளரொருவர் என வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றை கொண்டவராகவுமிருந்தால், அவர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பில் போஷாக்கியலாளர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(ங) ஆளொருவர், நற்குணமுள்ளவராகவும், கல்லூரிப் பேரவையினால் உளவியலாளர் ஒருவரென வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமிருந்தால் அவர் மருத்துவத் துறைசார் உதவியாளர் இடாப்பில் உளவியலாளர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

மருத்துவத் துறைசார் உதவியாளரது பெயர் எப்போது இடாப்பிலிருந்து இல்லாதழிக்கப்படலாம் என்பது.

60இ. இக்கட்டளைச்சட்டத்தின்கீழ், மருத்துவத்துறைசார் உதவியாளரொருவர் எனப் பதிவு செய்யப்பட்ட ஆளெவரினதும் பெயர், அவர்—

(அ) எந்தச் சான்றிதழின் அடிப்படையில் மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்தச் சான்றிதழெதனையும் இழந்தவராக இருந்தால் ; அல்லது

(ஆ) எந்தத் தவறு மருத்துவத்துறைசார் உதவியாளர் ஒருவராகத் தொழில்புரிவதற்குத் தகுதியற்றவர் எனக் காட்டுகின்றதோ, அந்தத் தவறொன்றுக்கு அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(இ) அத்தகையவராகத் தொழில் புரிவதற்குப் பாதுகாப்பாக அனுமதிக்கப்பட முடியாத அத்தகைய அளவுக்கு அசட்டையை அல்லது திறமையின்மையை மருத்துவத்துறைசார் உதவியாளர் என்ற தன்மையில் அவர் காட்டினால் ;

(ஈ) தொழில்முறை தொடர்பாக, இழிவான நடத்தைக்குக் குற்றவாளியாக இருந்தால்,

மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பிலிருந்து நீக்கப்படலாம்.

மருத்துவத் துறைசார் உதவியாளரொருவராகச் சட்டமுறையற்ற பாசாங்கு.

60ஈ. (1) பதிவு செய்யப்பட்ட மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராக இராத ஆளெவரும், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் மருத்துவத்துறைசார் உதவியாளர் ஒருவராகப் பதிவு செய்துள்ளார் என்பதை உட்கிடையாகக் காட்டும் ஏதேனும் பெயரை, தலைப்புப் பெயரை அல்லது விவரணத்தை பயன்படுத்தலாகாது.

(2) எந்த ஆளுடைய பெயர் மருத்துவத்துறைசார் உதவியாளர் இடாப்பின் எப்பாகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளெவரும் எந்த இடாப்பின் பாகத்தில் அத்தகைய ஆளின் பெயர் உண்மையாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த இடாப்பின் வேறேதேனும் பாகத்தில் அத்தகைய ஆளின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை உட்கிடையாகக் காட்டும் ஏதேனும் பெயரை, தலைப்புப் பெயரை, அல்லது விவரணத்தைப் பயன்படுத்துதலோ அல்லது வேறுவகையில் ஏதேனும் செயலைச் செய்தலோ ஆகாது.

தகைமையற்ற ஆள் மருத்துவத் துறைசார் உதவியாளராகத் தொழில்புரிவதன்மீதான மட்டுப்பாடு.

60உ. பதிவு செய்யப்பட்ட மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராகவிராத ஆளெவரும், மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராக வருமானமீட்டும் நோக்குடன் தொழில்புரிதலோ அல்லது தொழில்புரிவதாக வெளிக்காட்டிக்கொள்ளலோ அல்லது தொழில் புரிவதாகத் தமது பெயரை வெளியிடுதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"(ஊ) இலங்கைக்கு வெளியே தாதிகளாகத் தகைமை பெற்றபின், தாதித் தொழிலைத் திறமையாகப் புரிவதற்குப் போதிய அறிவையும் தேர்ச்சியையும் கொண்டுள்ளார் என மருத்துவப் பேரவையைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களான எல்லா ஆட்களினது பெயர்களையும் பாகம் ஊ கொண்டிருத்தல் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) பொதுத்தாதியொருவராக இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையானது, விண்ணப்பதாரர் தாதியொருவரென கல்லூரிப் பேரவையினால் அல்லது சுகாதாரசேவைகள் பணிப்பாளரால் வழங்கப்பட்ட வினைத்திறமைச் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் என்பதாதல் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இலங்கை மருத்துவப் பேரவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மருத்துவப் பேரவை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு அந்தப் பிரிவின் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"இக்கட்டளைச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தகைமை பெற்றிராதவர்களான குறித்த சில ஆட்களை, மருத்துவத் தொழிலர்களாக, பல் மருத்துவர்களாக, அல்லது தாதிமாராகப் பதிவுசெய்தல்.

67அ. இக்கட்டளைச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் தற்காலிகமாக வதிகின்றவரும், இக்கட்டளைச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் மருத்துவத் தொழிலரொருவராக, பல் மருத்துவரொருவராக, அல்லது தாதியாகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையற்றவருமான ஆளெவரும் அவர்—

(அ) மருத்துவத் தொழிலரொருவராக, பல்மருத்துவரொருவராக, அல்லது தாதியாக திறமையாகத் தொழில் புரிவதற்குப் போதிய அறிவும் திறமையும் கொண்டவராக இருந்தால் ; அத்துடன்

(ஆ) மருத்துவத் தொழிலரொருவராக, பல்மருத்துவரொருவராக, அல்லது தாதியாகத் தொழில் புரியும் நோக்கத்திற்கென இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் இலங்கையில் இருந்தால் இலங்கையில் அவரது தற்காலிக வதிவுக் காலப் பகுதிக்கு, மருத்துவத்தொழிலரொருவராக, பல்மருத்துவரொருவராக, அல்லது தாதியாகத் தொழில் புரிவதற்குப் பதிவு செய்படவேண்டுமென மருத்துவப் பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாமென்பதுடன், மருத்துவப் பேரவையானது, விண்ணப்பகாரர் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியுடையவரெனத் திருப்திப்பட்டால் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தலும் வேண்டும்.".

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு, "இருநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.". முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) பத்தொன்பதாம் பிரிவில் அல்லது 55 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்கென ஏதேனும் ஒழுங்குவிதியை ஆக்கு முன்னர், அமைச்சரானவர் மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசித்தல் வேண்டும். 19(உ) அத்துடன் (ஊ) என்னும் பிரிவுகளின்கீழான வரைவு ஒழுங்குவிதிகள், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதியைப் பெற்றுக்கொள்ள ஆளொருவரை உரித்துடையவராக்குகின்றதான ஏதேனும் தகைமையை வழங்குகின்ற அல்லது அளிக்கின்ற ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் அல்லது நிறுவனத்திற்கும், அதன் கருத்துரைக்காக அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரானவர், அத்தகைய பல்கலைக்கழகத்தால் அல்லது நிறுவனத்தினால் செய்யப்பட்டவையும் அந்த வரைவு ஒழுங்குவிதிகளை அத்தகைய பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதிக்குள்ளாக அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டவையுமான கருத்துரைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இக்கட்டளைச் சட்டத்தின் பாகங்கள் IV, V, VI, VII, VIII, IX" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இக்கட்டளைச் சட்டத்தின் பாகங்கள் IV, V, VI, VII, VIII, VIIIஅ, IX" என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக திரட்டு நிதியத்திலிருந்து ஆண்டுதோறும் பாராளுமன்றத்தால் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "பல்மருத்துவர்" என்பதன் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னராகப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"நேரொத்த பல்கலைக்கழகம்" என்பது இலங்கைப் பல்கலைக் கழகம் என்பது தொடர்பாக,

(அ) 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உயர்கல்விச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பல்கலைக்கழகமொன்று ;

(ஆ) 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் ; அல்லது

(இ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பல்கலைக்கழகமொன்று,

எனப் பொருள்படும்.".

(2) முறையே "பல்மருத்துவர் சட்டங்கள்", "மருத்துவச் சட்டங்கள்", "மருத்துவச்சிகள் சட்டங்கள்" என்பனவற்றுக்கான வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(3) "பதிவாளர்" என்பதற்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"பதிவாளர்" என்பது மருத்துவப் பேரவையின் பதிவாளர் என்று பொருள்படுவதுடன் பதில் பதிவாளரையும் உள்ளடக்கும்;".

(4) "ஒழுங்குவிதி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"இலங்கைப் பல்கலைக்கழகம்" என்பது இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டளைச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.".

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 29 (2) (ஆ), (iii) (ஆஆ) (ii) 31, 51 (1) (ஆ), 63 என்பவற்றில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பற்றிய குறிப்பீடொவ்வொன்றும், போதனு வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதி பற்றிய குறிப்பீடொன்றையும் உள்ளடக்குகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் பற்றிய குறிப்பீடு போதனு வைத்தியசாலைகள் பணிப்பாளர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது 74 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

"அப்போதிக்கரி உதவி மருத்துவ தொழிலர் என அறியப்படுதல் வேண்டும்.

74அ. சந்தருப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினலன்றி, முதன்மைச் சட்டவாக்கத்திலும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலுமுள்ள அப்போதிக்கரி பற்றிய குறிப்பீடொவ்வொன்றும், உதவி மருத்துவத்தொழிலர் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

40. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது, அதிலிருந்து பின்வருவனவற்றை விட்டுவிடுவதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

(அ) "மருத்துவச் சட்டங்களின்கீழ் விண்ணப்பகாரர் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து" என்ற தலைப்பின்கீழான வெளிப்படுத்துகை ; அத்துடன்

(ஆ) "மருத்துவச் சட்டங்களின்கீழ் விண்ணப்பகாரர் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமை பெற்றிருக்குமிடத்து" என்னும் தலைப்பின்கீழான வெளிப்படுத்துகை.

41. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணையானது, அதிலிருந்து பின்வருவனவற்றை விட்டுவிடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணையைத் திருத்துதல்.

(அ) "பல்மருத்துவர்கள் சட்டங்களின்கீழ் விண்ணப்பதாரர் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து" என்ற தலைப்பின் கீழான வெளிப்படுத்துகை ; அத்துடன்

(ஆ) "பல்மருத்துவர் சட்டங்களின்கீழ் விண்ணப்பதாரர் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமை பெற்றிருக்குமிடத்து" என்னும் தலைப்பின் கீழான வெளிப்படுத்துகை.

42. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான நான்காம் அட்டவணையானது, அதிலிருந்து பின்வருவனவற்றை விட்டுவிடுவதன் மூலம், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நாலாம் அட்டவணையைத் திருத்துதல்.

(அ) மருத்துவச்சிகள் சட்டத்தின்கீழ் "விண்ணப்பகாரர் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்குமிடத்து" என்னும் தலைப்பின் கீழான வெளிப்படுத்துகை.

(ஆ) "மருத்துவச்சிகள் சட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் அத்தாட்சிப்படுத்தப்படுவதற்குத் தகைமை பெற்றிருக்குமிடத்து" என்னும் தலைப்பின் கீழான வெளிப்படுத்துகை.

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.

43. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையானது, அதன் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

மருத்துவத்துறைசார் உதவியாளரொருவராகப்
பதிவு செய்வதற்கான வெளிப்படுத்துகை

கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்ட எக்ஸ் கதிராளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பதாரர் வைத்திருக்குமிடத்து,

(விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான், இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும் அ என அடையாளமிடப்பட்டதும், எக்ஸ் கதிராளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

————ஆம் ஆண்டு ————மாதம்
————ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
————ஆம் ஆண்டு ————ஆம் மாதம் ————ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின்
கையொப்பம்).

————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைகூட தொழினுட்பவியலர் ஒருவரெனத் தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து—

(விண்ணப்பகாரர் பெயரும் முகவரியும்) ஆகிய நான், பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் மருத்துவப் பரிசோதனைகூட தொழினுட்பவியலர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

————ஆம் ஆண்டு————மாதம்
———— ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
————ஆம் ஆண்டு————மாதம்
————ஆந் நாளாகிய இன்று என்முன்னிலையில்
வெளிப்படுத்தப்பட்டது

(வெளிப்படுத்துகை ஏற்பவரின்
கையொப்பம்.)

————.
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழக்கப்பட்ட பௌதிகச் சிகிச்சையாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும், முகவரியும் ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும் எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் பௌதிகச்சிகிச்சையாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

————ஆம் ஆண்டு————மாதம்
————ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

————ஆம் ஆண்டு————மாதம்
————ஆந் நாளாகிய இன்று என் முன்னிலையில்
வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின்
கையொப்பம்.)

———————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட தொழில்நோய் வைத்தியரொருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் தொழில்நோய் வைத்தியர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

————ஆம் ஆண்டு————மாதம்
........... ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
........... ஆம் ஆண்டு ..................... மாதம்
————ஆந் நாளாகிய இன்று என்முன்னிலையில்
வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின்
கையொப்பம்.)

———————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட மின்னிதய வரைபுப் பதிவியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் மின்னிதய வரைபுப் பதிவியலாளரொருவரென கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

————ஆம் ஆண்டு——————மாதம்

————ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ ஆந் நாளாகிய இன் என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

———————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

———————,
(வெளிப்படுத்துகை ஏற்பவரின்
கையொப்பம்.)

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட கேள்வியியலாளரொருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் கேள்வியலாளரொருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்

............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

———————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட பிணியாய் உளவியலாளரொருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் பிணியாய் உளவியலாளரொருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்

............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

———,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட பேச்சுச் சிகிச்சையாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் பேச்சுச் சிகிச்சையாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்

............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

———,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட காய்ப்பு மருத்துவவியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் காய்ப்பு மருத்துவவியலாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்
............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்
............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்
வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட உணவியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் உணவியலாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்
............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்
............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்
வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட கண்ணோய் மருத்துவத் துணையிய லாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்கு மிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வரு மாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் கண்ணோய் மருத்துவத் துணையியலாளர் ஒருவ ரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ஆம் ஆண்டு......................மாதம்

............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

———————,

சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட மின்கபால வரைபுப் பதிவியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்கு மிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் மின்கபால வரைபுப் பதிவியலாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

———————,

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

............ ஆம் ஆண்டு .................. மாதம்

............ ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ...................... மாதம்

............ ஆந் நாளாகிய இன்று என்முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

———————,

சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட போஷாக்கியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் போஷாக்கியலாளர் ஒருவரென கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர்) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்

........... ஆம் ஆண்டு ................. மாதம்

........... ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ..................... மாதம்

............ ஆந் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்,

கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்ட உளவியலாளர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து, (விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காண்பிக்கப்பட்டதும் அ என அடையாளமிடப்பட்டதும் உளவியலாளர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள (பெயர் ) ஆள் நானே.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

........... ஆம் ஆண்டு ................. மாதம்

........... ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது

............ ஆம் ஆண்டு ..................... மாதம்

........... ஆந் நாளாகிய இன்று என் முன்னிலையில்

வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்)

————,
சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்,

**முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கான பொதுவான திருத்தம்.**

44. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடு எதிலும் "சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி" என்ற சொற்கள் இடப்படுதல் வேண்டும் அத்துடன் "சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்" என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்ற சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

**எழுத்திலான ஏனைய சட்டத்தைத் திருத்துதல்.**

**45.** (முதன்மைச் சட்டவாக்கம் தவிர்ந்த) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில், அல்லது அத்தகைய எழுத்திலான சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப் படுத்தப்பட்ட அல்லது வேறு வகையிலான ஏதேனும் அறிவித்தலில் சான்றிதழில், தெரிவிப்பில் படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் நியமிக்கப்பட்டவரான சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் குறிப்பீடு செய்வதற்கு, "சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் இடங்களிலெல்லாம், அவற்றிற்குப் பதிலாக "சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

**ஒப்பந்தங்களுக்கான பேணல்கள்.**

**46.** இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளரென்ற முறையில் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரினுல் அல்லது பணிப்பாளர் சார்பில் வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு ஆவணம் எத்தன்மைத்தான சாதனமொவ்வொன்றும் அத்தேதியன்றும் அதன்பின்னரும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினுல் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்டிருப்பதாகவும், வழங்கப்பட்டிருப்பதாகவும் அல்லது நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அவ்வாருகவும் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150. (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.